ஜனாதிபதி ஆட்சிக்கெதிராக பொது முன்னணி அமைக்க முடிவு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்த்துப் போராடுவதற்கு, பொது முன்னணி ஒன்றை அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 02 இதழ்: 278
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-11-1991

கடத்தப்பட்ட தாய்லாந்து பொறியியலாளர் விடுவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரைப் பகுதியில், கடந்த புதன்கிழமை இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டவர்களில் இரு தாய்லாந்துப் பொறியியலா

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக பொலிசார் இலங்கை வர ஏற்பாடு

(சென்னை)

தமிழ்நாடு பொலிஸ் கோஷ்டி ஒன்று இலங்கைக்கு வந்து இலங்கை பொலிசாரிடம் ஆலோசனை நடத்த

(4ம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதி சூழ்நிலை ஏற்படுத்த அரசு மட்டத்தில் ஆலோசனை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைதி ஏற்படுவதற்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குவதில் அரசாங்க உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இதற்கு முன்னோடியாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தீவிர இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் அறியவருகிறது.

சமாதான முயற்சிகளை மேற்கொண்டுவரும் பிரிவினர் அரசாங்கத்துக்குச் செய்த சிபார்சுகளை அடுத்தே இந்த முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சர் தொண்டமான் தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பதாகவும், அவர் திரும்பி வந்ததும் சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைதி நிலையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து அரசுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கில் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது குறித்து அரசஉயர் பீடம் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தீவிரமான ஆலோசனைகளை தற்போது நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ராவ் 5 லட்சம் வாக்குகளால் வெற்றி

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தின் தென்பகுதியில் உள்ள நந்தியால் தொகுதியில் போட்டியிட்ட இந்தியப்பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் 5 லட்சத்து 80 ஆயிரத்து 297 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

பவாரும் தெரிவு

(புதுடில்லி)

பாராமதி தொகுதியில் போட்டியிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் வெற்றிபெற்றுள்ளார். பாரதிய ஜனதாகட்சி வேட்பாளர் டாக்டர் பகுசாதே ஹண்டேயை விட 5 லட்சத்து 6 ஆயிரத்து 313 அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தால் இவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அரசியல் தீர்வே தமிழர் பிரச்னைக்கான ஒரே தீர்வு

(கொழும்பு)

தமிழர் பிரச்னை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக் கட்சி அதிருப்தியாளர் குழு, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் தாம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன என்பது பற்றி அண்மையில் ஆராய்ந்தன.

அரசியல் தீர்வே தமிழர் பிரச்னைக்கான ஒரே தீர்வு என இதன்போது முடிவு எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர் குழு இந்தப் பிரச்னையை ஒரு தேசியப் பிரச்னையாகக் கருதுவதாகவும், தமிழர் பிரச்னைக்கு இறுதியான தீர்வு எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்திருப்

(4ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் பொருள்கள் விலையில் வீழ்ச்சி

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சிப் பகுதியில் பொருள்களின் விலைகள் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவந்த லொறிகள் குடாநாட்டிற்குள் கொண்டு செல்வதற்கான பாதைகள் துண்டிக்கப்பட்டதனால் கொழும்பில் இருந்து கொண்டு வந்த பொருள்களை கிளிநொச்சி வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்துள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பசளை கிருமிநாசினி, களைகொல்லி மற்றும் பல தரப்பட்ட பொருள்கள் குறைந்த விலையிலும் மார்க்க சகாயவிலைக்கு விற்பனை செய்யப்படுவதால் வன்னியிலும் ஏனைய பகுதியில் இருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

அதிரடிப்படை மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பில் அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் தாக்குதல் நடாத்தியுள்ளதாகவும், திருமலையில் வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம்

(4-ம் பக்கம் பார்க்க)

கோபாலசாமியின் சகோதரர் கைது

(சென்னை)

தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை கோபாலசாமியின் இளைய சகோதரர் திரு ரவிச்சந்திரன் என்பவரை தமிழ்நாடு பொலிசார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

திரு ராஜீவ் காந்தி கொலை

(4-ம் பக்கம் பார்க்க)

பத்திரிகை விற்பனையாளரும் ரிதிகமவிற்கு அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு மாநகரிலுள்ள பிச்சைக்காரர்களுடன் பத்திரிகை விற்பனையாளர் ஒருவரும் பொலிசாரினால் ரிதிகமவிற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இம்மாதம் முதல் வாரத்தில் கொழும்பில் நடைபெற

(4ம் பக்கம் பார்க்க

தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களில் 6556 பேர் இதுவரை விடுவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையிலுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்களில் இதுவரை 6,556 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இளைஞர்கள் புனர்வாழ்வு நிலையங்களில் இருந்த காலத்தில் சுயதொழில் முயற்சி பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

வானொலி நாடகம்

உலகின் பல்வேறு வானொலி நிலையங்களுக்கும் நாடகம் எழுதும் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு வானொலி நாடக நூல்கள் கெட்டிக்காரர்கள் 25/- முதலாளிகள் 30/- (சி-5608)

இத்தாலியில்

ஈழத்தமிழ் இளைஞர் விபத்தில் பலி

(ஊர்காவற்றுறை)

செம்பியன்பற்றைச் சேர்ந்த தவம் என்ற இளைஞர் (வயது-28) இத்தாலியில் கார் விபத்தில் சிக்கிப் பலியானார். இச்சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றது (59)

திருவிளக்குப் பூசை திருவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கிழக்கு துரவடிப் பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவிலில் இம்மாதம் 21-ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணி தொடக்கம் திருவிளக்குப் பூசை நடைபெறும். திருவிளக்குப் பூசையில் பங்கு பெறுவோர் 20-ஆம் திகதி மதியத்திற்கு முன்னர் தமது பெயர்களை பதிவு செய்யவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண சகாயநிதி

2000 ரூபா வழங்கப்படும்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட அரச ஒப்பூதியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் கடந்த 16-ந் திகதி சனிக்கிழமை யாழ். புனித யாகப்பர் மண்டபத்தில் சங்கத்தின் உபதலைவர் திரு. சண்முகரட்னம் தலைமையில் நடைபெற்றது.

உறுப்பினர் ஒருவர் இறந்தபோது அவரின் உறவினருக்கு மரண சகாய நிதியாக 2000 ரூபாய் வழங்கப்படும் என இக்கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் நடத்தப்படும் தமிழ்த்துறை ஆய்வரங்கு இம்மாதம் 20ம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு பொருளியல் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும்.

"இடைச்சொல் பற்றிய மூன்று எடுகோள்கள்" என்ற தலைப்பில் அ. சச்சிதானந்தம் ஆய்வாளராகக் கலந்துகொள்கின்றார்.

புதிய கிளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய கிளை ஒன்றை மிக விரைவில் திறக்கவிருக்கிறது.

கண்டிக்குளி தெற்கில் உள்ள யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இப்புதிய கிளை இல.29 திறக்கப்படவிருக்கிறது. (வி)

நிதி இருந்தாலும் உணவுப்பொருள், மருந்து பெறமுடியாதுள்ளது

(யாழ்ப்பாணம்)

"இங்கு அனர்த்தங்கள் நிகழும்போது உணவுத்தேவை, மருந்துப்பொருட்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதில் எவ்வளவு சிரமங்கள் அனுபவிக்கவேண்டியுள்ளது. நிதி இருந்தாலும் உடன் தேவைகளுக்கு இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை."

இவ்வாறு கரவெட்டி, கரணவாய் கிழக்கு முதலுதவித் தொண்டரணியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். செஞ்சிலுவைச் சங்க பிரதித் தலைவரும், கரவெட்டிப் பிரிவு தலைவருமாகிய திரு. கே. ஜி. இராசேந்திரம் கூறினார்.

முதலுதவித் தொண்டர் அணித் தலைவர் பொன். அருந்தவராசா தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தொண்டர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

செல்வச்சந்நிதிஆலய பிரதம தர்மகர்த்தா தெய்வேந்திர ஐயர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். டாக்டர் கே. பாலசுப்பிரமணியம், ஆசிரியர் மகேந்திரம், திரு. என். தவச்செல்வம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

புனர்வாழ்வுக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் மீண்டும் விரைவில் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

150 மில்லியன் ரூபா இதற்கென உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (158)

சுயதொழில் ஊக்குவிப்பு

(சாவகச்சேரி)

இடம்பெயர்ந்த மக்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நாவற்குழியில் பப்படம் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று தமிழீழ விடுதலைப்புலிகளால் கடந்த வெள்ளியன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையை தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கந்தன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். (155)

திறந்தவெளி அரங்கு

(கொக்குவில்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மக்களால் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளியரங்கு நிறுவி எதிர்வரும் 21-ஆம் திகதி காலை நிகழ்ச்சிகளாகக் கொடியேற்றம், எழுச்சிப் பாடல்கள், சிற்றுரைகள், பட்டிமன்றங்களும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருமலை மண் மீட்கப்போராடிய மாவீரர்களின் சித்திரக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன. இதற்கு முன்னோடியாக இப்பகுதி வீதிகள், மைதானம் ஆகியன சிரமதான மூலம் சீரமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [135]

எழுச்சிக் கூட்டங்கள்

(வவுனியா)

மாவீரர் வார எழுச்சிக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளும் மாவீரர் நாள் கூட்டங்களும் 26ம் திகதி மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒளி ஏற்றுவதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

காரைநகர் ப. நோ. கூ. சங்க

பொதுச்சபையை கூட்ட ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தை விரைவில் கூட்டுவதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு வசதியாக காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் வசிக்கும் சங்க பொதுச் சபை உறுப்பினர்கள் தங்கள் தற்போதைய முகவரிகளை பண்ணாகம் வழக்கம்பரையில் தற்காலிகமாக செயற்பட்டு வரும் சங்கத் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. சிவஞானம் தெரிவித்துள்ளார். (72)

கைதிகள் தப்பியோட்டம்:

12 சிறைக் காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம்

(சென்னை)

வேலூர் மத்தியசிறைச்சாலையிலிருந்து 8 ஆயுள் தண்டனை சிறைக்கைதிகள் தப்பியோடியது தொடர்பாக ஒரு உதவி ஜெயிலர் உட்பட 12 சிறைக் காவலர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தனிப்பொலிஸ்படை ஒன்று தப்பியோடியவர்களை பிடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து பிரஜைகளை கண்டுபிடிப்பதில் சிரமம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட இரு தாய்லாந்து பொறியியலாளர்கள் உட்பட நால்வரையும் தங்களால் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதாக பாதுகாப்புப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தாய்லாந்து பிரஜைகளையும் தேடி மட்டக்களப்பு பகுதியில் பல இடங்களில் தீவிர தேடுதல் நடத்தப்பட்டதாகவும் இதுவரையும் இவர்களைக் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாகவும் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்த

உட்பூசலைத் தடுப்பதற்கு நான்கு அம்சத் திட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் ஏற்பட்டுள்ள உட்பூசலைத் தடுக்க நான்கு அம்சத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாடெங்கிலும் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைகளைக் கூட்டி, கட்சிக்குள் நிலவும் உட்பூசல் பற்றி விளக்கம் கொடுக்கப்படுமா? அல்லது சுதந்திரக்கட்சியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களால் தயாரிக்கப்பட்ட 4 அம்சத் திட்டத்தை ஏற்று சிறிமாவோ கட்சியின் தலைவியாக தொடர்ந்தும் இருப்பாரா என்று அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகிறது.

மூன்று வருடங்களில் 59,000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

நாட்டின் சகலபகுதிகளிலும் கடந்த 3 வருடங்களில் 59 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களில் இனவிகிதாசார அடிப்படையிலேயே ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை கமிட்டியின் தலைவர் திரு. ஜேர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கிலும் ஆசிரிய நியமனத்தின்போது இனவிகிதாசார முறையே பின்பற்றப்படுவதாகவும் திரு. மென்டிஸ் மேலும் கூறினார்.

திருமலை மாவட்டத்திலுள்ள

பெரிய விளாங்குளத்தில் சிங்களக் குடியேற்றம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய விளாங்குள பகுதியிலுள்ள மகாதிவுல் வெவ கண்டம் 2இல் வெளிமாவட்டத்திலிருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இக்குடியேற்றவாசிகளுக்கு அண்மையில் திருமலை அரசாங்க அதிபர் டபிள்யூ. கௌடவெல காணிகளுக்கான உரிமைப்பத்திரத்தை வழங்கினார்.

நமல்வத்தையில் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகள் தற்போது மொரவெவ பகுதியில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு நிலங்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [158]

தென்தமிழீழ சித்திர கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் படம்பிடித்துக்காட்டும் வகையில் எதிர்வரும் 21-ம் திகதி முதல் 27ம் திகதிவரை மட்டுநகர், அம்பாறை தொடர்பகத்தினரால் ஓர் சித்திரக்கண்காட்சி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடாத்தப்படவிருக்கிறது.

இந்நாட்களிலே சிறப்பு நிகழ்ச்சியாக 22ம் திகதி அன்று கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. கலை நிகழ்வுகள் யாவும் தென் தமிழீழ மண்வாசனையை மக்கள் முன் கொண்டு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

31-ம் நாள்

நினைவஞ்சலி

செல்வி வயித்திலிங்கம் சுபதர்சினி

மலர்வு: 17-08-85 உதிர்வு: 19.10-91

திதி: 18-11-91

அன்புச் செல்வமே எங்களையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டதேன். உனது நினைவுகளால் ஏங்கித்தவிக்கும் நிலையில் உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்கா, தம்பிமார்.

கண்டி வீதி.
கொடிகாமம்.

(சி-5591)

மாவீரர் தியாகங்கள் விடிவிற்கு ஒளியாகட்டும்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழீழ விடுதலைப் போராட்டமானது பல தடைகளைத் தாண்டி உறுதியுடனும் நம்பிக்கையுடனும் புதிய உத்வேகத்துடன் இன்று பெரு வளர்ச்சிபெற்று நிற்கின்றது. ஒரு சிலருடன் கெரில்லா அணியாகப் பிறந்த எமது விடுதலை அமைப்பு இன்று பல ஆயிரக்கணக்கான போராளிகளைக் கொண்டு தனக்கென்ற ஒரு தனித்துவத்துடன் விளங்குகின்றது. சிங்கள இனவாதத்துக்கு எதிராகவும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சமூக விரோதக் கும்பலுக்கு எதிராகவும் போராடி இதுவரைக்கு மூவாயிரத்து ஐந்நூறு மாவீரர்கள் மண்ணின் விடுதலைக்காக மரணித்துவிட்டனர்.

தமிழீழ மாவீரர் நாள் பணிமனை வெளியிட்ட செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

ஒவ்வொரு வீரர்களும் தாயக மண்ணுக்காய் களம் சென்று மறைந்தாலும் ஒவ்வொருவரின் வாழ்விலும், மறைவிலும் தனித்துவம் உண்டு. அந்தத் தியாகிகளின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்ப்போமானால் முருங்கன் காட்டில் பொலிஸ் உளவுப் படையினரால் எமது முகாம் முற்றுகைக்கு உள்ளான போதும் ஆயுதங்களோ சயனைட்டோ அற்ற நிலையில் சாதுரியமாகவும் துணிவுடனும் எதிரியை எதிர்கொண்டு அழித்து தம் போராட்டத்தினை முளையிலேயே அழியவிடாது காப்பாற்றிய திரு. செல்லக்கிளி அம்மானை எண்ணிப் பாருங்கள்.

மீசாலை முற்றுகையின் போது காயமடைந்த நிலையிலும் தன்னிடம் இருந்த ஆயுதத்தின் ரவைகள் தீரும் வரை சுட்ட பின்னர் ஆயுதத்தையும் போராட்ட இரகசியங்களைக் காப்பாற்றுவதற்காகவும் சக போராளியைப் பார்த்து தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்துடன் தப்பி ஓடும்படி கூறிய திரு சீலனின் தியாகத்தின் உயர்வை எண்ணிப் பாருங்கள்

ஆயுத வாகனம் பின்னேர முன்னால் மோட்டார் வாகனத்தில் நிலைமைகளை அவதானித்துக்கொண்டு சென்றபோது எதிர்பாராத விதமாக குறுக்கே வந்த இராணுவத்தைச் சந்திக்க நேர்ந்தபோது தன் இலக்கினை மாற்றி எதிரியை திசை திருப்பி தன் உயிரைக் கொடுத்து சக போராளிகளையும் காப்பாற்றிய திரு. ரஞ்சன்லாலாவின் அர்ப்பணிப்பு உணர்வினை எண்ணிப் பாருங்கள்.

அடம்பன் மண்ணை ஆக்கிரமிக்க வந்த சிங்கள இராணுவத்தினர் பலரைக் கொன்று பல ஆயுதங்களைக் கைப்பற்றி இரண்டு இராணுவத்தை உயிருடன் பிடித்த போராட்டத்தில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தி வீரமரணமடைந்த விக்டரை எண்ணிப் பாருங்கள்.

புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்து போராட்டத்திற்கு புதுப் பொலிவை ஏற்படுத்திய திரு பொன்னம்மான் போர்முனையில் ஒரு கையை இழந்த பின்பும் மறுகரம் கொண்டு போர்முனைகளில் வெற்றிகளைப் படைத்த திரு. நவத்தை (கபி) எண்ணிப் பாருங்கள்.

இவர்கள் வழியில் எத்தனையோ மாவீரர்கள் தங்கள் தேகத்தைவிட இந்தத்தேசமே பெரிதென எண்ணி பல வரலாற்றுத் தியாகங்களைப் புரிந்துள்ளனர்.

இவர்களின் தியாகங்கள் நாளை எங்கள் விடிவுக்கு ஒளியாகட்டும். மக்கள் ஒருமித்து தம் கரம்கொண்டு போராட்டத்தைப்பலப்படுத்தி மாவீரர் கனவை நனவாக்கட்டும்.

யுத்தம் முடிவுக்குவருமாயின் 500 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

"வடக்கு, கிழக்கு யுத்தம் முடிவுக்கு வருமாயின் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் 500 ரூபா சம்பள உயர்வு வழங்கத் தயார்" என்று தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தொகைப் பணம் துண்டு விழுகிறது. இந்த யுத்தம் முடிவுக்கு வருமாயின் அபிவிருத்தி வேலைகட்கும் அரச உத்தியோகத்தர்களின் சம்பள உயர்விற்கும் இந்நிதியைப் பயன்படுத்த முடியும்.

எரிபொருள் தட்டுபபாட்டினால்

காளை மாடுகளின் விலை அதிகரிப்பு

(அச்சுவேலி)

எரிபொருட்தட்டுப்பாட்டை அடுத்து காளை மாடுகளின் விலையும் குடாநாட்டில் பல மடங்கு அதிகரித்துள்ளது.

சோடி எருதுகளின் விலை 40 ஆயிரம் ரூபாவுக்கு மேலும் சென்றுள்ளது. சாதாரணமாக எருதுகளின் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் வாகனங்களை விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட தரகர்நடைமுறைகள் இப்பொழுது காளை மாடுகளின் விற்பனையிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

பல தரகர்கள் தமது தொழிலை மாற்றி காளை மாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகக் கல்லூரி:

இம்மாதம் 23ம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பல்கலைக் கழக கல்லூரியோடு இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளுக்கும் மாணவர்கள் சேர்வதற்கு இம்மாதம் 23ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

மேலும் அமைச்சு தெரிவித்திருப்பதாவது: கல்விப்பொதுத் தராதர உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1987, ஆகஸ்ட் 88 டிசம்பர் 89 ஆகிய பரீட்சைகளில் நான்கு பாடங்களில் சித்தியடையவேண்டும் அல்லது மூன்று பாடத்தில் சித்தியடைந்தும் நான்காவது பாடத்தில் இருபத்தைந்து புள்ளிகளுக்கு மேல் எடுத்திருக்கவேண்டும்,

மொத்தமாக 180 புள்ளிகளுக்கு மேல் எடுத்திருக்கவேண்டும். மூன்று தரத்துக்கு மேல் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் தோற்றியவர்கள் இக்கல்லூரிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

பல்கலைக் கழகமொன்றில் படித்துக்கொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்கமுடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு வெவ்வேறு கல்லூரிகளுக்கு செல்ல விண்ணப்பிக்கலாம்.

அனுமதி கிடைத்தவர்கள் வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றமுடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாக்கல்லூரியில் தராதரப்பத்திரமும் டிப்ளோமாவும் கொண்ட கணித விஞ்ஞானம் பாடம் நடைபெறும்.

விண்ணப்பிப்பவர்களின் தூயகணிதமும், பிரயோக கணிதமும் சித்தியடைந்தவர்கள் விசேட மேலதிக தகுதியாக கணிக்கப்படும்.

அதேபோல வவுனியாக் கல்லூரியில் தமிழும் ஆங்கிலமும் போதனமொழியாக இருக்குமாம் எனத்தெரியவருகிறது. யாழ். பல்கலைக் கழகத்தோடு தொடர்புகொண்டு மேலதிக விபரங்கள் பெறலாம். (152)

ராணுவ தகவல்நிலையம்

(கொழும்பு)

இராணுவ தலைமையகத்தில் தகவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யுத்த நிலைமை மக்களுக்கு அறிவிப்பதற்காக வெகுஜனத் தொடர்புத் துறையில் செய்திகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள இந்த நிலையம் உதவி புரியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்நாள் ஏற்பாடுகள்

(கொக்குவில்)

மாவீரர் தினத்தையொட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களும், சேவைக் கழகமும் இணைந்து கல்லூரி வளவையும், சுற்றாடலையும் துப்புரவு செய்யத் தீர்மானித்துள்ளதாக கல்லூரி அதிபர் திரு இ. மகேந்திரன் தெரிவித்துள்ளார். (135)

முல்லையில்

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மாவீரர்நாள் கொண்டாட்ட வைபவங்களில் கலை நிகழ்ச்சிகளாக தமிழனின் "மானம் காத்த நாள்' என்ற வில்லிசையும். 'விலங்குகள் தெறிக்கின்றன', 'காலம் இட்ட கட்டளை'. 'கண் திறந்தது' என்ற நாடகங்களும் முல்லை மாவட்டக் கலை-பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில்

புதுக்குடியிருப்பில் 'மாவீரர் வழியில் லெப்டினன் துர்க்கா' என்ற வில்லிசையும் 'திரும்பிப் பார் ஒரு துரோகியின் சாதி' என்றநாடகமும் மாவீரர்நாள் கலைநிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன.

ஒட்டுசுட்டானில்

"வடக்கா? கிழக்கா? தெற்கா?' "போர்முனையில் தமிழோசை' ஆகிய நாடகங்களும், 'கிராமிய நடனம் கவிதை பட்டிமன்றம் என்பனவும் ஒட்டுசுட்டானில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இராசி பலன்

18 11 1991

திங்கட்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 02)

ஏகாதசி மு. ப. 8-36 வரை, உத்தரட்டாதி பி. ப. 2-53 வரை, மரணயோகம், இராகு காலம் காலை 7-32 முதல் 9-08 வரை, சுபநேரம் பகல் 12-02 முதல் 1-38 வரை, சமநாள்.

மேடம்: மன அமைதி, குடும்ப செலவு, குறைகேட்டல்

இடபம்: வழித்துணை உதவி வாக்கு பெருமை, இனிய நட்பு.

மிதுனம்: வாக்கு வசீகரம், தயாள சிந்தனை, தொழில் லாபம்.

கடகம்; பெற்றோர்தொல்லை, கடும்போக்கு, அதிகாரிகள் சினம்.

சிங்கம்: நோய்த்தொல்லை, மனமுடை, அநாவசியத் தொல்லை;

கன்னி; விவாகார உறவு, மன நிறைவு, விருந்துபசாரம்;

துலாம். திருமணயோகம், இலாப வரவு, உல்லாச வாழ்வு.

விருச்சிகம்: முற்கோபம், தொழில் அலைச்சல், வயிற்றில் ரோகம்.

தனுசு: அவமானம், அதிஷ்டக் குறைவு, தொழில் தகராறு.

மகரம்: சுகசௌக்கியம், சகோதரர் உதவி, மனமாற்றம்;

கும்பம்: மனக்குமுறல், குடும்பப் பிரிவு, [illegible];

மீனம்: எண்ணியது கைகூடல், பணவரவு, தந்தையர் உதவி.

ஜோஸ்யர்

க. பொ. த. (சாதாரண) பரீட்சை

அடையாள அட்டைக்கு மாற்று ஏற்பாடு செய்ய கோரிக்கை

(சித்தன்கேணி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் அடையாள அட்டைக்கு வடமாநில கல்விப்பணிப்பாளர் மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமெனபெற்றோர்களும், மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் தேசிய அடையாள அட்டை, தபால் திணைக்கள அடையாள அட்டை ஆகியவற்றுக்கு விண்ணப்பித்திருந்தும் இதுவரை அடையாள அட்டை கிடைக்கவில்லை.

பரீட்சைத்திணைக்களம், இந்த அடையாள அட்டைகளை மாத்திரமே மாணவர்கள் பரீட்சையின்போது சமர்ப்பிக்கவேண்டும் என அறிவித்துள்ளது.

ஆதலால் பெற்றோர்களும், மாணவர்களும் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் அடையாள அட்டை தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (137)

யாழ்.

மாவட்ட மழை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வானிலை அவதான நிலையப் பகுதியினர் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்த மழை வீழ்ச்சியை அறிவித்துள்ளனர்.

இம்மாதம் 11ம் திகதி 1.2 மி. மீற்றரும், 12ம் திகதி 108 8 மி. மீற்றரும், 13ம் திகதி 56. 1 மி மீற்றரும், 14ம் திகதி 67. 6 மி. மீற்றரும் பதிவாகியுள்ளன.

இந்த நாட்களில் 28 தொடக்கம் 33 கடல் மைல் வேகத்துடன் காற்று வீசியதாகவும் வெள்ளி காலை 8 30 மணியுடன் வானிலை சீரடைந்ததெனவும் தெரிவித்துள்ளனர். (சு)

தொழில் இழந்தோர் விபரம் சேகரிப்பு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொழிலிழந்தவர்களுடையவிபரங்கள் கிராம சேவை அலுவலர்களினால் திரட்டப்படுகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களினால் மீன்பிடி. மேசன், தச்சு தொழில் போன்ற] தொழில்செய்து தற்போது தொழிலிழந்தவர்களுடைய விபரங்கள் திரட்டப்படுகின்றன. (137)

தொற்றுநோய்களால் அகதிகள் பாதிப்பு

(கொழும்புத்துறை)

வன்னியில் நூற்றுக்கணக்கான அகதிகள் பலவித நோய்களுக்குள்ளாகி உரிய மருந்துகள் இன்றி பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாவில் கண்நோய், முல்லைத்தீவில் மலேரியா, கிளிநொச்சியில் மூளைக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே ஏற்பட்ட கடும் வரட்சியாலும், பெய்துவரும் கடும் மழையாலும், குடிநீர், சுகாதார சீர்கேட்டாலும் இத்தகைய நோய்கள் பரவுவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (154)

பயிர் பாதுகாப்பு

நஷ்டஈட்டுத் திட்டத்தை அமுல்படுத்தக் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரத்துச் செய்யப்பட்ட நெற் பயிர்பாதுகாப்பு நஷ்டஈட்டுத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை கோருவது எனத்தீர்மானிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடங்களில் பெரும்போக காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகளுக்கு நெற் பயிர்பாதுகாப்பு நஷ்டஈடு வழங்கப்பட்டுவந்தது. தற்போது இந்த திட்டத்தை அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரத்துச் செய்துள்ளது.

அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் உடனே மேற்கொண்டு வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

[illegible] கலை இலக்கிய இணையத்தின் எழுத்தாளர் ஒன்று கூடல் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் அமைப்பாளர் கவிஞர் சத்தியசீலனின் 'கலைவண்ணம்' இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெறஉள்ளது.

இலக்கிய ஆர்வலர் அனைவரும் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள கலைவண்ணம் இல்லத்துக்கு அழைக்கப்படுகின்றனர்.

இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல மொத்த சில்லறை வியாபாரிகளையும் சகல கிராமசேவகர்களையும் இன்று திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் உள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிமண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாதுசமூகமளிக்குமாறு நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதிமுகாம்களின் பிரச்சினைகள்பற்றி ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட சகல அரசசார்பற்ற நிறுவனங்களையும், சுகாதார அதிகாரிகளையும், கிராமஅலுவலர்களையும் இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணிக்குதமது அலுவலகத்தில் நடைபெறும் கூட்டமொன்றில் கலந்துகொள்ளுமாறும் நல்லூர் உதவி உதவி அரசாங்க அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக செயற்படாதிருக்கும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை புனரமைத்து மீள இயங்கச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று 18-ம் திகதி மாலை 3 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவன மையப்பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும் கூட்டுறவுத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் அழைக்கப்படுகின்றனர்.

மன்னார் மாவட்டம்:

மாவீரர்நாள் பேச்சு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் நடத்தப்பட்ட மாவீரர் நாள் பேச்சுப்போட்டியில் 6ம்ஆண்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான மன்னார் மாவட்ட முடிவுகள் வருமாறு:

பிரிவு - (ஆண்டு 1)

து. விநோதன் இலக்கடிப்பிட்டி றோ. த. க. பாட - 1ம் இடம், மை. சாந்தினிகுருஸ் பறப்பாங்கண்டல் றோ. த. க. பா - 2ம் இடம், ச. கொன்சவ், இலக்கடிப்பிட்டி றோ. க. த. க. பா - 3ம் இடம்.

பிரிவு - 2 (ஆண்டு 2, 3)

யூட்பிரசாந்தன் பறப்பாங்கண்டல் றோ. க. த. க. பா. 1ம் இடம், இ. மகிசா வட்டக்கண்டல் அ. த. க. பா - 2ம் இடம், பா. சிந்துஜா மடு அகதிமுகாம் பாட - 3ம் இடம்.

பிரிவு - 3 (ஆண்டு 4, 5)

மு. தயாநந்தி விளாங்குளி அ. த. க. பாட - 1ம் இடம், றே. மேரிஜக்லின் பறப்பாங்கண்டல் றோ. த. க. பாட 2ம் இடம், லூ. சேமின் டிலோசனா மடு அகதிமுகாம் 3ம் இடம்.

பிரிவு - 4 (ஆண்டு 6)

இ. விஜிதா உயிலங்குளம் றோ. க. த. க. பா-1ம் இடம், ஜே. சிறிசாந்தினி கருங்கண்டல் றோ. க. த. க. பா 2ம் இடம், ஜெ. ஜெனிற்ரு வட்டக்கண்டல் அ. த. க. பா 3ம் இடம்.

இப்பேச்சுப் போட்டிகளில் மன்னார் மாவட்டம் பெருநிலப் பரப்பைச் சேர்ந்த 35 பாடசாலைகளில் 806 மாணவர்கள் பங்குபற்றினர்.

நன்மை பெறும் சிங்கள கடற்றொழிலாளர்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் கூட்டுறவுச்சங்கங்களை அமைத்து கடற்றொழில் அபிவிருத்தியில் நன்மைகளை அடைவதாகக் கூறப்படுகிறது.

அபயபுர கடற்றொழில் சங்கம், எச்சந்தகமோதங்கம கடற்றொழில் சங்கம், மகாமயாபுர கடற்றொழில் சங்கம் ஆகியசங்கங்கள் அமைக்கப்பட்டு கடற்றொழில் திணைக்களத்திலும் கூட்டுறவுத் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

92 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை மேற்படிசங்கங்கள் ஒவ்வொன்றும் தலா இரண்டு வள்ளங்களைப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

அரச நிவாரணம் கிடைக்கவில்லை

(திருமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமத்தில் மீளக்குடியமர்ந்த 700க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு கடந்த இரண்டுமாதங்களுக்கு மேலாக எதுவித அரச நிவாரணமும் கிடைக்காமையால் இக்குடும்பங்கள் பசிபட்டினி நிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

கோபாலசாமியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சயனைட் அருந்தி தற்கொலை செய்தவரும் ராஜீவ் காந்தி, பத்மநாபா கொலைகள் தொடர்பாக தேடப்பட்ட சாந்தனுக்கு புகலிடம்கொடுத்திருந்தார் என்றும் இவர் மீது குற்றம்சாட்டப்படவுள்ளது.

அதிரடிப்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரோந்து சென்ற படையினரை நோக்கியும் விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது.

புலிகளின் தாக்குதலினால் பொலிஸாருக்கோ, படையினருக்கோ ஏற்பட்ட சேதங்கள் பற்றிய எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (க)

இந்தியா - பாகிஸ்தான்

மூன்றாவது போர் விரைவில் ஏற்படும்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் 3 வது போர் ஒன்று ஏற்படும் அபாயம் இருப்பதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்: இந்தியா தனது பிரச்சினைகளிலிருந்து கவனத்தை திசை திருப்ப இந்தப்போரை அதிகமாக விரும்பக் கூடுமென்று தெரிவித்தார். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/91.

தென் பகுதியிலும்

புனர்வாழ்வு வேலைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் மாத்திரம் அல்லாமல் நாட்டின் தென் பகுதியிலும் அரசு புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நன்கு பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் மூலம் இந்த புனர்வாழ்வு வேலைகள் மேற்கொள்ளப்படாத போது லட்சக்கணக்கான மக்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவார்கள் என உளவியல் நிபுணர்கள் அரசுக்கு தெரிவித்திருப்பதாக அறியவருகிறது. (மா)

அரிசியின் விலையை அரசு குறைத்தது

(கொழும்பு)

அரிசி இறக்குமதிக்கான சுங்க தீர்வையை 4சத வீதத்தால் குறைப்பதென அரசு முடிவு செய்துள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் கடந்த சில வருடங்களாக அரிசியின் விலை அதிகரித்துக் காணப்படுவதனையடுத்து நிலைமையை உன்னிப்பாக அவதானித்த அரசு மேற்படி முடிவை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

இதன்படி ஒரு கிலோ அரிசியை 14 ரூபா 80 சதத்திற்கு வர்த்தகர்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளதாகவும் தனியார் வர்த்தகர்கள் ஒரு கிலோ அரிசியை 15 ரூபாவிற்குபொதுமக்களுக்கு வழங்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதுடன், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அதே நேரத்தில், நாட்டின் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர் குழு மேலும் தெரிவித்துள்ளது. (மா)

கடத்தப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் வைத்து இவர்கள் இருவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, இவர்களுடன் கடத்தப்பட்ட மற்றைய இரண்டு சிங்களப் பொறியியலாளர்களையும் விடுவிப்பது தொடர்பாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் இராணுவ உயர் அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர். (க)

தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசிடம் அனுமதி கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களைப் பற்றி மேலும் தகவல்களைச் சேகரித்துக்கொள்ளவே தமிழ்நாடு பொலிஸார் கொழும்புக்கு வருவதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்துள்ளது.

பொது முன்னணி அமைப்பதை முன்பு எதிர்த்து வந்த திரு. அனுர பண்டார நாயக்கா தற்போது மனம் மாறி இதற்கு இணங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதுக் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு முயற்சித்துவரும் ஐ. தே. கட்சி அதிருப்தியாளர் குழுவினரும் இந்தப் பொது முன்னணி அமைப்பதற்கு ஆதரவு வழங்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியிடமிருந்து நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்குவதே இந்த முன்னணியின் முக்கிய பணியாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

தொலைத்தொடர்பு நிலையம்

(கொழும்பு)

இராணுவத் தலைமையகத்தின் வெகுசனத் தொடர்புத் துறையினருக்கு நவீன வசதிகள் பொருந்திய தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க உத்தேசித்துள்ளதாகப் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார். (க)

கிளிநொச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகர்கள், நுகர்வோர் இங்கு வந்து பொருள்களை கொள்வனவுசெய்கின்றனர். (144)

ராவ் 5 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளரான திரு. பங்காரு லக்ஷ்மணை விட 5 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று இந்தியப் பிரதமர் வெற்றி பெற்றதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆந்திரப்பிரதேசத்தின்சட்டசபை உறுப்பினராக 20 ஆண்டு காலம் பதவி வகித்த பிரதமர் அக்காலப்பகுதியில் 10 வருடகாலம் அமைச்சராகவும் 3 வருடகாலம் முதல் அமைச்சராகவும் பதவிவகித்துள்ளார்.

1977ம் ஆண்டு இவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். (க)

தடுத்து வைக்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் அடிக்கடி தமது ஊருக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கையெழுத்திடுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். (153)

பத்திரிகை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்த சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்புமாநகரிலிருந்து ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள் காலி மாவட்டத்திலுள்ள ரிதிகமவிற்கு பலாத்காரமாக பொலிசாரினால் லொறிகளில் கொண்டு செல்லப்பட்டார்கள்.

நள்ளிரவு வேளையில் கொழும்பு மாநகரைச் சுற்றிவந்த பொலிசார் பிச்சைக்காரர்களுடன் நடைபாதைகளில் உறங்கிக்கொண்டிருந்தவர்களையும் பிச்சைக்காரர்களாகக் கணித்து தங்கள் வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

பத்திரிகை விற்பனையாளரும் அவரது உதவியாளரும் நடைபாதையில் உறங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு வந்த பொலிசார் அவர்களையும் ரிதிகமவிற்கு கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)